## அரபு- கொரிய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்

# இளைஞர் அணியின் ‘முத்தமிழறிஞர் பதிப்பக’ நூல்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!













**சென்னை, ஜன.19 இளைஞர் அணி முன்னெடுப்பான முத்தமிழறிஞர் பதிப்பக நூல்கள், அரபு - கொரிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட இருக்கின்றன. இந்நூல்களை அயல் மொழிகளில் கொண்டு சேர்க்க முன்வந்திருக்கும் பதிப்பாளர்கள் முனைவர் சரவணன் மற்றும் முனைவர் ஸ்ரீ ரோகிணி ஆகியோருக்கு துணை முதலமைச்சரும் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.**










சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா - 2025 கடந்த 16ஆம் தேதி தொடங்கி, மூன்று நாட்கள் நடைபெற்றது. இதில் உலகம் முழுவதும் இருந்து பல்வேறு பதிப்பகங்களைச் சேர்ந்த பலரும் பங்கேற்றனர்.

ஆண்டுதோறும் ஏற்றமிகு வளர்ச்சியினைக் கண்டு வரும் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் இந்த ஆண்டு 60க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பதிப்புலக ஆளுமைகள் இப்புத்தகத் திருவிழா வில் கலந்து கொண்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு 24 நாடுகள் பங்குபெற்று 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2024ஆம் ஆண்டு 40 நாடுகள் பங்குபெற்று 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் !**

இந்த ஆண்டு நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில் 1,125 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதில் தமிழ் மொழியிலிருந்து அயலக மொழிகளுக்கு 1,005 ஒப்பந்தங்களும் அயலகமொழிகளிலிருந்து தமிழ் மொழிக்கு 120 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. குறிப்பாக அரபிக் மொழிக்கு 33 ஒப்பந்தங்களும், பிரெஞ்ச் மொழிக்கு 32 ஒப்பந்தங்களும், மலாய் மொழிக்கு 28 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகியுள்ளன.

**முத்தமிழறிஞர் பதிப்பக நூல்கள்**

இந்த பன்னாட்டுப் புத்தகத் திருவிழா வில், இளைஞர் அணியின் முன்னெ டுப்பான முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடுகளான `திராவிடத்தால் வாழ்கிறோம்’, `திராவிடப் போராளிகள்’ மற்றும் `திராவிட மாடல் அரசு’ ஆகிய நூல்கள் அரபு மற்றும் கொரிய மொழிகளில் மொழிபெயர்க்க, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன .

தந்தை பெரியார் காலம் முதல் திராவிட இயக்கத்தில் இணைந்து செயல்பட்ட முக்கியமான பெண் ஆளுமைகளைப் பற்றி வழக்கறிஞர் அருள்மொழி அவர்கள் எழுதியுள்ள முக்கியமான நூல் `திராவிடப் போராளிகள்’.

**திராவிடத்தால் வாழ்கிறோம்**

நூற்றாண்டைக் கடந்த திராவிட இயக்கத்தின் வரலாற்றை இளம் தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் வகையில், ஓவிய வடிவில் அமைந்துள்ள இயக்க வரலாற்று நூலான `திராவிடத்தால் வாழ்கிறோம்’, கோவி.லெனின் அவர்களின் சிறப்பான எழுத்தாக்கத்தாலும் ஓவியர் சொக்கலிங்கத்தின் உயிரூட்டும் ஓவியங்களாலும் ஆனது.

நம் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்கள் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைக்கும் `திராவிட மாடல் அரசு’ ந.வினோத்குமார் அவர்களின் எழுத்தாக்கத்தால் உருவானது.

இந்த மூன்று புத்தகங்களும் மொழிபெயர்க்கப்படுவதன் மூலம், திராவிட இயக்கத்தின் பெருமைகள் திசை யெங்கும் செல்ல இருக்கின்றன.

**உதயநிதி ஸ்டாலின்**

இந்நூல்களை அயல் மொழிகளில் கொண்டுசேர்க்க முன்வந்திருக்கும் பதிப்பாளர்கள் முனைவர் சரவணன் மற்றும் முனைவர் ஸ்ரீ ரோகிணி ஆகியோருக்கு துணை முதலமைச்சரும் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

---

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா:

# கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் குதிரை எல்கைப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்!

கரூர், ஜன. 20 - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், துணை முதலமைச்சர் இளைஞர்களின் எழுச்சி நாயகர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் மாபெரும் குதிரை எல்கைப் பந்தயம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை வாங்கல் சாலை அரசு காலனியில் நடைபெற்றது. மாவட்ட கழகத் துணைச் செயலாளர் எம் எஸ்கே. கருணாநிதி தலைமை வகித்தார். கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் பி. முத்துக்குமாரசாமி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி குதிரைப் பந்தயத்தை துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார்.

வெற்றிபெற்ற பெரிய குதிரைக்கு முதல் பரிசு ரூ. 30,000 மற்றும் கோப்பை இரண்டாம் பரிசு 25 ஆயிரம் மற்றும் கோப்பை, மூன்றாம் பரிசு 20,000 மற்றும் கோப்பை, சிறிய குதிரைக்கு முதல் பரிசு 25 ஆயிரம் மற்றும் கோப்பை, இரண்டாவது பரிசு 20 ஆயிரம் மற்றும் கோப்பை, மூன்றாவது பரிசு 15000 மற்றும் கோப்பை, புதிய குதிரைக்கு முதல் பரிசு ரூபாய் 20 ஆயிரம் மற்றும் கோப்பை, இரண்டாவது பரிசு 15000 மற்றும் கோப்பை, மூன்றாவது பரிசு 10ஆயிரம் மற்றும் கோப்பை, ஆகியவற்றை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், பிஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே.சி. பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கை விளக்க துணை செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனவர்ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி .சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பிவி. பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், மாநகரக் கழக செயலாளர் எஸ்பி.கனகராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர் .ஜோதிபாசு, கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர்.எஸ். ராஜா, மத்திய கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ. ராமர், எம் எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக், சி. வளர்மதி, வி.கே. வேலுசாமி, எல். கரிகாலன், ப.தியாகராஜன், சி. கதிரவன், புகழூர் நகர கழக செயலாளர் நகர்மன்ற தலைவர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என். எஸ் ஆறுமுகம், வி.கருப்பண்ணன், விகேடி ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே.சாமிநாதன், சி.கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ்.காளியப்பன், எம்.சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, பிஏகுமார், பேரூர் செயலாளர்கள் கே .அம்மையப்பன், பிஎஸ்மணி, கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம் முத்து, சி தங்கராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கமேடு. சக்திவேல், அணி அமைப்பாளர்கள் ஆர்ஜிசரவண மூர்த்தி, ஜிம்.எம் சிவா, கே நந்தினிதேவி, கே தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிரமணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ.அப்பாசாமி, எம்.ப்ரின்சி, சி.நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லுசாமி எஸ் மனோகர், எம்பிஎஸ். சுரேஷ், பங்க் கேசுப்பிரமணி, விஆர். அண்ணாவேலு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏ. கனகராஜ், சிகே.ராஜா, எம். பாபு, ஜிவிஅருண், யுவராஜ், கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர். சோமசுந்தரம், இல்ஏ.சுகுணா, டிஎஸ்பி.சுப்பிரமணியன், வி பழனிசாமி, பி.பிரபு, சி.சரவணன் ஆகியோர் பங்கேற்றனர். மாவட்டப் பிரதிநிதி பி.கதிர்காமம் நன்றி கூறினார்.





கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்டம், கரூர் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த கழக இளைஞர் அணியின் பாக இளைஞர்களுக்கான சமூக வலைதளப் பயிற்சி கரூர் பிரேம் மகாலிலும், கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த கழக இளைஞர் அணியின் பாக இளைஞர்களுக்கான சமூக வலைதளப் பயிற்சி கரூர் மணவாடி எஸ்.கே.பி.மகாலிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ.பிரகாஷ், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கழக செய்தித் தொடர்பாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைத்தள தன்னார்வலர் விக்னேஷ் ஆனந்த், கரூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கமேடு சக்திவேல், கரூர் மாவட்ட கழக இளைஞர் அணியினர், இப்பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

